(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பில் இந்தத் துள்ளு வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில், 14 ஆடுகள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இது கிட்டத்தட்ட 80 விழுக் காடு ஆகும். இந்த வேகத்தில் போனால் ஆட்டு இனமே அழிந்து போய்விடுமே. இது பெரிய இழப்பு ஆயிற்றே. அதற்கு தடுப்பு ஊசி போடப்பட்டதா அல்லது மருந்து கண்டுபிடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆடுகள், குறிப்பாக இளம் ஆடுகள் புரதச் சத்து மிக்க தீவனம் அதிகப்படியாகச் சாப்பிடுவதால் இரைப்பையில் சுரக்கும் அமிலங்கள் மிதப்பட்டு வியாதிக்கான நுண் கிருமிகள் மிக அதிகமாகப் பெருகி, அவைகள் வெளிப் படுத்தும் நச்சுப் பொருள்கள் ரத்தத்தில் கலந்து மிக விரைவில் மரணம் ஏற்படுகிறது. ஆகையால், இந்தத் துள்ளு வியாதி தொத்து நோய் அல்ல; அது அதிகமாகச் சாப்பிடுவதன் வாயி லாகத்தான் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் வரு வதற்கு முன் தடுப்பு ஊசிகள் போட முடியாது. மற்ற ஆடுகளுக் குப் பரவுவதற்கு முன் மற்ற ஆடுகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

6. அறிக்கை அளித்தல்.

பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, "1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை(வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (இரண்டாவது அறிக்கை)" அளிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் உரைமீதான விவாதம் நடைபெறுகையில் சட்ட முன் வடிவுகளை அறிமுகம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக் கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படுவதற்கு முன் னால் இப்படி அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய் வது முறையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பல தடவை இப்படி நடந்து விட்டது. நாங்கள் யாராவது

இந்தப் பிரச்சினையை எழுப்புவோம் என்று நீங்கள் எதிர்பார்த்திருந்தீர்களோ என்னவோ என்று நினைத்தேன். நன்றி அறிவிக்கும் தீர்மானம் தோற்றுப் போனால் என்ன நிலைமை ஏற்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது அறிமுகப்படுத்துவது முறைதான்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவைப்'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்)சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.